தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.02.2026) அண்ணா அறிவாலயத்தில், திராவிடத் தமிழர் கட்சியின் தலைவர் சி.வெண்மணி சந்தித்து, கோவையில் 15.02.2026 அன்று நடைபெறவுள்ள "திசை காட்டும் திராவிடம்" அரசியல் மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன், மாநில இணைப் பொது செயலாளர் ஈரோடு பொன்னுசாமி, தலைமை நிலைய செயலாளர் பேரறிவாளன், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி ஆகியோர் உள்ளனர்.

கார்ல்மார்க்ஸ் சிலை; முதல்வருக்கு நன்றி!

வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.கூட்டணிக்கு ஆதரவு!

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் எஸ்.பாஸ்கரன் அறிவிப்பு!

சென்னை, பிப். 11 - இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலச் செயலாளர் எஸ். பாஸ்கரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட்(எம்.கே) கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு 08.2.2026 ஞாயிற்றுக் கிழமை அன்று சென்னை தேனாம்பேட்டையில் உள்ள எமது கட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள தோழர் எம்.கல்யாணசுந்தரம் அரங்கில் நடைபெற்ற கட்சியின் மாநிலத் தலைவர் தோழர் மு.பழனியப்பன் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இந்திய ஐக்கிய சும்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் எஸ்.பாஸ்கரன் அரசியல் மற்றும் ஸ்தாபன அறிக்கைகளை சமர்ப்பித்தார். கட்சியின் மாநில பொருளாளர் தோழர் எஸ்.சுந்தரமூர்த்தி, மாநிலத் துணைச் செயலாளர் தோழர் ராணா என்கின்ற ராஜன் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட 87 மாநிலக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி(M.K)யின் மாநிலக் குழுவில் எடுக்கப்பட்ட முக்கிய அரசியல் தீர்மானங்கள்:

எந்தவிதமான சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் அற்ற சமத்துவ சமுதாயத்தை உலகெங்கும்படைப்பதற்காக தன் சிந்தனாசக்தி முழுவதையும் தன் வாழ்நாள் முழுவதிலும் செலவழித்து, கம்யூனிசம் என்ற விஞ்ஞான பூர்வமான அரசியல் தத்துவத்தை உலகத்திற்கு அளித்த மாமேதை கார்ல் மார்க்ஸ். அவரது முழு உருவச் சிலையினை தமிழக அரசின் சார்பில் எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள கன்னிமாரா நூலகத்தின் வாயிலில் நிறுவிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி(எம்.கே) தனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

இந்துத்துவா மதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. சங்பரிவார் கும்பல் எந்த வடிவத்திலும் தமிழ் மண்ணில் கால் பதித்துவிட அனுமதிக்க கூடாது என்ற எமது கொள்கையினை முன்னிறுத்தி வருகின்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான இந்தியா கூட்டணியை எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி முழுமனதுடன் ஆதரிப்பதாக எமது கட்சி முடிவெடுத்துள்ளது

நாடு தழுவிய வேலை நிறுத்தம்!

ஒன்றிய மோடி அரசின் தொழிலாளர் விரோத போக்குகளை கண்டித்து வருகிற 12ம் தேதி நடைபெறும் நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட்(M.K) கட்சியும், எமது தொழிற்சங்க அமைப்பான இந்திய ஐக்கிய தொழிற்சங்க கவுன்சிலும்(UTUC) முழு ஆதரவு கொடுப்பதுடன் வேலை நிறுத்த போராட்டத்திலும் பங்கெடுப்பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை ரூ.6 கோடியே 41 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 41 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-02-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

நிதி உதவி பெறுவோர் விவரம்

1.	க.கதிர்வேல், அருள்தாஸ்புரம், தத்தனேரி, மதுரை 625002.	25,000/––
2.	திருமதி அ.சரஸ்வதி, சின்னமனூர், உத்தமபாளையம், தேனி மாவட்டம்.	25,000/–
3.	திருமதி ஒ. தமிழ்செல்வி, வார்டு–2, மடப்பாறை, திண்டுக்கல் மாவட்டம்.	25,000/–
4.	கணேசன் (எ) கணபதி, லாந்தை, புத்தேந்தல் அஞ்சல், இராமநாதபுரம்	25,000/–
5.	மா.முத்துச்சாமி, பெரியபுளியம்பட்டி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்	25,000/–
6.	இரா. பேச்சிமுத்து, மேலப்பாவூர், கீழப்பாவூர், தென்காசி மாவட்டம்..	25,000/–
7.	எச்.சாகுல்ஹமீது, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்	25,000/–
8.	எம்.சாகுல்ஹமீது, புதுக்கடை தெரு, மணாளக்குறிச்சி, கன்னியாகுமரி	25,000/–
	மொத்தம்	**ரூ.2,00,000/-**